


திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில், நடைபெற்ற 'தமிழ்நாடு தலைகுனியாது' மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டத்தில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர். உடன் தலையாமங்கலம் ஜி.பாலு, ப.ஆடலரசன், ஒன்றியக் கழகச் செயலாளர் பால.ஞானவேல், சௌமியன் வைத்தியநாதன், சோம.இளங்கோவன், அ. தீன்ஷாநூஃப், ஏவிஆர்.கோபால்ராம், செல்வி நிவேதா ஜெசிகா, சுரேஷ் ஜெ.மனோகரன், வே.கௌதமன், முகமது இஸ்ரத், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்கள் எம்.என்.ராஜா, ஆர்.ராணிகண்ணன், சோ.விஜயகுமார் உள்ளிட்ட கழக முன்னணியினர் உள்ளனர்.



கோவையில் மேற்கு மண்டல தி.மு.க வாக்குச்சாவடி குழுவினர் பயிற்சி மாநாடு 27.02.2026 அன்று, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. மாநாடு நடைபெறும் இடத்தை கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆகியோர் நேரில் பார்வையிட்டனர். இதில் மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், மாவட்ட கழக பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமசித்திரன், ஏர்போர்ட் ராஜேந்திரன், செந்தில், தனபால் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### இந்தியாவிலேயே முதல்முறையாக

# மாற்றுத் திறனாளிகளுக்கு தனித் துறை அமைத்தது தி.மு.க. அரசு தான்!

## திருவள்ளூரில் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு !

*திருவள்ளூர், பிப் 26;-*

*திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு*



*79 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் தலா ரூ.1,01,800/- மதிப்பீட்டில் ஆக மொத்தம் ரூ.80,42,200/- மதிப்பிலும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு 8 கிராம் தங்க நாணயம் மற்றும் வங்கி கணக்குகளில் தலா ரூ.50000 மற்றும் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.25000 வீதம் ஆக மொத்தம் ரூ. ஒரு இலட்சம் வங்கிகளில் வரவு வைத்த ஆணைகளையும், 196 மாற்றத்திறனாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகள், பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர சைக்கிள்கள், மடக்கு சக்கர நாற்காலிகள், மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு சக்கர நாற்காலிகள், செயற்கை அவையங்கள், ஊன்று கோல்கள், காதுக்கு பின்னால் அணியும் காதுகருவிகள், மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கான உபகரணங்கள் என ரூ.50,03,590/- ஆக மொத்தம் ரூ.1,40,15,190/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்*

*அப்போது பேசிய ஊனமுற்றோர் என்பதை மாற்றுத்திறனாளிகள் என மாற்றிய முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் வழியில் நடக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ஒரு கால் அல்லது இரு கால்கள் பாதிக்கப்பட்ட 79 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் ஒன்றின் மதிப்பு ரூ.1,01,800/- என மொத்தம் ரூ.80,42,200/- மாற்றுத்திறனாளிகளுக்கான திருமண உதவித்திட்டத்தின் கீழ் 1 பட்டதாரிக்கு ரூ.50,000/- மற்றும் 8 கிராம் தங்க நாணயம், 2 பட்டதாரி அல்லாதவர்களுக்கு ரூ.25,000/- மற்றும் 8 கிராம் தங்க நாணயம் மொத்தம் ரூ.1,00,000/- மதிப்பிலும் மற்றும் பார்வையற்றோர்/காதுகேளாத 60 மாற்றுத்திறனாளிகளுக்கு ஸ்மார்ட் போன் ஒன்றின் மதிப்பு ரூ.14,490/- என மொத்தம் ரூ.8,69,400/- மதிப்பில் ஆக மொத்தம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக மொத்தம் ரூ.90,11,600/- மதிப்பில் வழங்கப்பட்டது.*

*மேலும் தனியார் எரிப்பொருள் எண்ணெய் நிறுவன பங்களிப்பு நிதியின் கீழ் Artifical Limbs Manufacturing Corporation of India, ALIMCO Auxiliary production Centre வாயிலாக 196 மாற்றத்திறனாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகள், பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர சைக்கிள்கள், மடக்கு சக்கர நாற்காலிகள், மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு சக்கர நாற்காலிகள், செயற்கை அவையங்கள், ஊன்றுகோல்கள், காதுக்கு பின்னால் அணியும் காதுகருவிகள், மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கான உபகரணங்கள் என ரூ.50,03,590/- (ரூபாய் ஐம்பது இலட்சத்து மூன்றாயிரத்து ஐநூற்று தொண்ணூறு மட்டும்) மொத்தம் ரூ.1,40,15,190/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சத்து பதினைந்தாயிரத்து நூற்று தொண்ணூறு மட்டும்) மதிப்பிலான உதவி உபகரணங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு இன்று வழங்கப்படுகிறது. உதவி உபகரணங்களைப் பெற்ற அனைத்து மாற்றுத்திறனாளிகளும் வாழ்கையில் மென்மேலும் வளர எனது நல்வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்*

*"இந்தியாவிலேயே முதல்முறையாக மாற்றுத்திறனாளிகளுக்கு தனி துறைஅமைத்தது திமுக அரசு " "தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்காக சிந்தித்து செயல்படுகிறது" "எந்த திட்டத்தை தொடங்கினாலும் மாற்றுத்திறனாளிகளை மனதில் வைத்து முதல்வர் தொடங்குகிறார் என அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அவர்கள் கூறினார்.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.சசிகாந்த் செந்தில் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.இராஜேந்திரன் துரைசந்திரசேகர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலவலர் சீ.குமார், தனியார் எரிப்பொருள் எண்ணெய் நிறுவன பொது மேலாளர் கௌஷல் குமார், இளநிலை மேலாளர் ரிஷப் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.*

### முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார்! அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியில்

# மேல் அரசம்பட்டில் ரூ.173 கோடி மதிப்பீட்டில் அணைக் கட்டும் பணி!

## வேலூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

வேலூர், பிப். 26 –

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அணைக்கட்டு சட்டமன்ற தொகுதியில் மேல் அரசம்பட்டு கோயில் மலை ஆற்றின் குறுக்கே ரூ.173 கோடியில் புதிய (நீர்த்தேக்கம்) அணைக் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டி காணொளி காட்சி வாயிலாக கழகத்தலைவர் தமிழ்நாடு முதல்வர் திட்டத்தை துவக்கி வைக்கிறார். இதுகுறித்து வேலூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., தனது அறிக்கையின் வாயிலாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்.



ஆங்கிலேயர் ஆட்சி காலம் தொட்டு சுதந்திர இந்தியாவில் ஏறக்குறைய 100 ஆண்டு காலமாக வேலூர் மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, மேல் அரசம்பட்டில் அணை கட்ட வேண்டும் என்று விவசாய பெருமக்கள், விவசாய தொழிலாளர்கள், பொது மக்கள் உள்ளிட்டோர் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்த வண்ணம் இருந்த சூழ்நிலையில் கடந்த 2016 –ம் ஆண்டு நடந்த சட்ட மன்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் கழகத்தலைவர் இந்நாள் முதலமைச்சர் அவர்களாலும் மற்றும் இந்நாள் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களாலும் நான் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு மக்களின் ஏகோபித்த ஆசியோடும், ஆதரவோடும் வெற்றி பெற்று சட்ட மன்றத்தில் முதன் முதலில் அன்றைய அ.தி.மு.க. அரசிடம் மேல் அரசம்பட்டில் அணை கட்ட வேண்டும் என எனது கன்னிப் பேச்சு உரையில் கோரிக்கை வைத்தேன்.

அன்றைய அ.தி.மு.க. அரசு, நான் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ. என்ற அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு அத்திட்டத்தை கிடப்பில் போட்டும், நீதிமன்ற வழக்கை காரணம் காட்டி கால தாமதம் செய்து வந்தார்கள்.

இந்நிலையில் கடந்த 2021ம் ஆண்டு கழகத்தலைவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் என்னை இரண்டாவது முறையாக வேட்பாளராக்கி தேர்தல் களம் கண்டு தொகுதியின் அத்தனை நல் உள்ளங்களின் ஒட்டுமொத்த ஆதரவோடு சட்டமன்ற உறுப்பினராக தேர்வு பெற்று சட்டமன்ற அவைக்குள் சென்று கழகத்தலைவர் முதல்வர் அவர்களிடம் அணைக்கட்டே இல்லாத தொகுதிக்கு அணைக்கட்டு என பெயர் இருந்தாலும் அதனை போக்கும் வகையில் அணைக்கட்டு தொகுதி, மேல் அரசம்பட்டில் அணைக் கட்ட வேண்டும் என கோரிக்கை வைத்து வந்த நிலையில் பல்வேறு தடைகளை கடந்து தாயுள்ளத்தோடு நிதிநிலை அறிக்கையில் ரூ.173 கோடியில் அணைக்கட்டு மேல் அரசம்பட்டு கோயில் மலை ஆற்றின் குறுக்கே (நீர்த்தேக்கம்) அணை கட்டப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை வெளியிட்டு அணைக்கட்டு தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து பால் வார்த்த கழகத்தலைவர், முதல்வர் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழக பொதுச்செயலாளர், நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும், கழக வடக்கு மண்டல பொறுப்பாளர், பொதுப்பணித்துறை அமைச்சர் எ. வ. வேலுவுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நன்றி தெரிவித்து, இத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு காணொளி காட்சி வாயிலாக இன்று (26.02.2026 வியாழக் கிழமை) சென்னையில் அடிக்கல் நாட்டு விழா துவக்கி வைக்கும் அதே வேலையில் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி ஒடுக்கத்தூரில் மிக பிரமாண்ட தொடக்க விழா நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிக்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள்,

ஒன்றிய, பகுதி, மற்றும் பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட வார்டு மற்றும் ஊர்க்கிளை நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், விவசாயப் பெருங்குடி மக்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவில் திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் எனது சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வேலூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்.

### புதுமைப்பெண் திட்டம் – தமிழ்ப் புதல்வன் – காலை உணவுத் திட்டம் என

# மீண்டும் முதல்வராக முதல்வரின் கல்வித் திட்டங்களே போதும்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் அறிக்கை!

*சென்னை, பிப்.26-*

*முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் மாபெரும் சாதனையாக மாணவச் செல்வங்களுக்கு புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், காலை உணவுத் திட்டம் என அளப்பரிய திட்டங்கள் மூலம் முதல்வர் அவர்கள் மீண்டும் அரியணையில் அமர இத்தகைய கல்வித் திட்டங்களே போதும் என நமது திராவிட இயக்கத்தின் நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*



*அவரது அறிக்கை வருமாறு :-*

*பெண்ணே நீ சாதிக்க பிறந்தாய், நீ படிக்க வேண்டும். படிப்பு உன் வாழ்க்கை முன்னேற்ற வழிகாட்டி. இந்த விலைமதிப்பில்லா சொத்தை தந்தை பாசத்தோடு 'புதுமைப்பெண்' திட்டத்தை நான் உனக்கு அளிக்கிறேன்.*

*இந்த கல்வி போதுமென்று வறுமையால் வாடாமல் உயர் கல்வி படிப்புக்கு உன் வங்கிக் கணக்கில் மாதம் ஆயிரம் ரூபாய் அளித்த கொடை வள்ளலே நீர் அல்லவா கல்விக் கண்ணைத் திறந்த தெய்வம் உன் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சி என்று எண்ணி அளித்த திட்டம்.*

*மாணவர்களே நாளைய சமுதாயம் நீதான் என்று மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து படிக்க ஊக்கவித்த கல்வி உன்னை நல்வழிப்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருக்க வேண்டும் என்று 'தமிழ் புதல்வன்' என்ற திட்டம் நம் முதலமைச்சர் கொடுத்துள்ளார். தமிழ்நாட்டில் ஏழை குழந்தைகள் சந்தோஷமாக பள்ளிக்கு வர வேண்டும் என்று 'காலை உணவு' திட்டத்தை கொடுத்து பசி அறியா குழந்தைகளை முகத்தில் சிரிப்பை கண்டு சந்தோசப்படும் எங்கள் முதல்வரே 2026 தேர்தல் இமாலய வெற்றி உங்களுக்கு கொடுத்து மீண்டும் நீங்கள் முதல்வராக அரியணையில் அமர நீங்கள் கொடுத்த கல்வி திட்டங்களே ஆகும்.*

*இவ்வாறு திருமதி. ஓவியம் தெரிவித்துள்ளார்.*

### கோவை 73வது வார்டு மாமன்ற உறுப்பினர் டி.சந்தோஷின் 8 வயது மகள்

# வெண்பா மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவால் மரணம்!

## 7 பேருக்கு மறுவாழ்வு!



*கோவை, பிப். 26-*

*கோவை 73வது வார்டு மாமன்ற உறுப்பினர் டி.சந்தோஷ் மகள் வெண்பா (வயது 8) மூளையில் ஏற்பட்ட இரத்த கசிவால் மரணம் அடைந்தார், அவர் 7 பேருக்கு மறு வாழ்வு அளித்தார்.*

*கோவை மாவட்டம், 73வது வார்டு மாமன்ற உறுப்பினர், நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு தலைவர் டி.சந்தோஷ் - சுகன்யா ஆகியோரின் மகள் வெண்பா (வயது 8) இவர் கடந்த 23.02.2026 தேதி அன்று இரத்த அழுத்தம் அதிகமாகி மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டு சுயநினை விழுந்தார் உடனடியாக அவர் அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக கோவை கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தது.*

*இந்த நிலையில் 25.02.2026-ஆம் தேதி அவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டது, அதனைத் தொடர்ந்து அவரது பெற்றோர்கள் டி.சந்தோஷ் - சுகன்யா ஆகியோர் மகள் வெண்பா உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்தார்கள். தமிழ்நாடு உறுப்பு தான ஆணையத்தின் அனுமதியுடன் அவரது கல்லீரல், சிறுநீரகங்கள், கண்கள், எலும்பு மற்றும் தோல் ஆகியவை தானமாக பெறப்பட்டது. கல்லீரல் மற்றும் ஒரு சிறுநீரகம், கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைக்கும், ஒரு சிறுநீரகம், கண்கள், எலும்பு மற்றும் தோல் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும், வழங்கப்பட்டது.*

*கே.எம்.சி.ஹெச் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்கள் உறுப்புகளை மற்ற நோயாளிகளுக்கு பொருத்துவதற்கு தகுந்த நேரத்தில் மிகவும் திறம்பட செயல்பட்டு உறுப்புகளை அனுப்பிவைத்தனர்.*

*இது குறித்து கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை தலைவர் டாக்டர்.நல்லா ஜி பழனிசாமி அவர்கள் கூறுகையில், மக்களிடையே உடல் உறுப்பு தானம் குறித்து அதிக விழிப்புணர்வு தேவைப்படுகிறது. ஒருவர் இறந்த பிறகு அவரது உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டால் அது பலரது உயிரைக் காப்பாற்ற உதவும். பின்னர் உடல் உறுப்பு தானம் வழங்கிய செல்வி. வெண்பா குடும்பத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**குளித்தலை இளமுருகு**

**பிப்ரவரி 26 (2000)**



**திராவிட இயக்கத்தின் வளர்ச்சியிலே அடிநாள் தொட்டு அக்கறையோடும் ஆர்வத்தோடும் ஈடுபாடு கொண்டு உழைத்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களில் ஒருவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1957ல் குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டபோது வெற்றிக்கு அடித்தளமாக இருந்து உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.**

**காதல் கலப்புமணம் செய்தவர். ஆண்பெண் சம உரிமையை நிலைநாட்டிட வேண்டுமென்பதற்காகவே தன் பெயரோடு தன் மனைவியின் பெயரையும் இணைத்துக் கொண்டு "இளமுருகு பொற்செல்வி" என்றே தம்மை அழைத்துக் கொண்டவர்.**

**1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு 'அண்ணா' விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.**

**"கழகத் தொண்டர்கள் உள்ளத்தில் வரலாற்றுச் சிறப்போடு வாழ்பவர்" என தனது இரங்கல் செய்தியில் தலைவர் கலைஞர் தெரிவித்துள்ளது சிறப்பாகும்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**